1972 எப்ரல் 4]

திரு. ஆ. கு. சுப்பையா : கூட்டுறவுத் துறையில் செயலாளராக அல்லது தலைவராக இருக்கக்கூடியவர்கள் இலட்ச ரூபாய் வரையில் மோசடி செய்து தற்கொலை செய்து கொள்ளுகிருர்கள். அந்த ரூபாயைத் திரும்ப வசூலிப்பதற்கு அது சம்பந்தப்பட்ட நபரின் குடும்பத்தாருடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிலே சட்டப்பிரச்சினைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

Pension for wives of deceased freedom fighters.

***864. *Q.*—Dr. H. V. HANDE:** Will the Hon. the Chief Minister be pleased to state —

(*a*) whether the Government have any proposal to extend the pension amount given to the freedom fighters to their wives after the death of the pensioners ; and

(*b*) If so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) : நடைமுறையில் உள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதிய திட்டத்தின்படி, ஓய்வூதியத் தினரின் மறைவுக்குப் பிறகு அவரின் மனைவிக்கு, அன்னாரின் மறைவு வரையிலாவது, அல்லது மறுமணம் செய்துக் கொள்ளும் வரையிலாவது, இவ்விரண்டில் எது முன்னதாக உள்ளதோ அதுவரையில் அவரின் வருவாய் திங்களொன்றுக்கு ரூபாய் நூற்றுக்கு மேற்படக்கூடாது என்ற விதிக்கிணங்க, ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, 100 ரூபாய் வருவாய் என்று வைத்திருப்பதை சற்று உயர்த்தி வைக்கக்கூடாதா என்று முதல் அமைச்சர் அவர்களை நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே இந்தத் திட்டம் 1966-ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்டபோதே இப்படிப் பட்ட வரையறை க்குட்பட்டுத்தான் வைக்கப்பட்டது. அப்போதே கூட இந்த அளவுக்கு எதிர்பார்க்கப்படாமலேதான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இப்போதே கிட்டத்தட்ட ஐம்பது லட்ச ரூபாயை ஓராண்டுக்கு அவர்களுக்காக வழங்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக் கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கூட பலமுறை சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதில் இந்த நூறு ரூபாய்க்கு மேற்படக் கூடாது என்ற விதியை இப்பொழுது மாற்றுவதற்கில்லை.

திரு.த. சோலையா : விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பல கொடுமை களுக்கும் இன்னல்களுக்கும் ஆளான பல குடும்பங்களின் பெயர்கள் அரசாங்க ரிகார்டுகளில் இல்லை என்றும், அவர்கள் உண்மையாகவே

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என்றும் எங்களைப் போன்றவர்களிடத்தில் வலியுறுத்திச் சொல்லுகிறார்கள். பலருடைய வருத்தங்களைத் துடைத்துப் பழக்கப்பட்ட இந்த அரசு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடைய வருத்தங்களையும் துடைக்க முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூன்று மாதம் அவர்கள் சிறைச்சாலையில் இருந்தார்கள் என்பதற்கான அத்தாட்சி வேண்டும் என்று ஏற்கெனவே வரையறுக்கப்பட்டிருக்கிறது. அந்த ரிகார்டுகளில் இல்லாமலேயே "நாங்கள் சிறைச்சாலையில் இருந்தோம்" என்று கூறுகிறவர்கள், அவர்களோடு சிறையில் இருந்த பொறுப்பானவர்களுடைய சாட்சியங்களோடு விண்ணப்பித்தால் அதைப்பற்றி கவனிக்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அதற்கிணங்க பல பேருக்கும் இந்த மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் மேலும் பல பேர், "நாங்கள் சிறையில் இருந்தோம், நாங்கள் மூன்று மாதம் இருந்தோம், நான்கு மாதம் இருந்தோம்" என்று வாயளவில் சொல்வது எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வது என்பது இயலாது.

திரு. வை. பாலசுந்தரம் : இதற்கு முன்பே இருந்த அரசு சுதந்திரப் போராட்ட வீரருக்குத் தர வேண்டிய மதிப்பும் மரியாதையும் தரவில்லை என்றும் இன்றைய அரசு அவர்களுக்குத் தரவேண்டிய மதிப்பும் மரியாதையும் தந்து, ஓய்வூதியம் முதலியவற்றை உயர்த்தியது என்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முன்பிருந்த அரசு சுதந்திரப் போராட்ட வீரர்களை மதிக்கவில்லை என்று கூறுவது தவறு. அவர்கள் மதித்த அந்த அடிப்படையில் மேலும் பலரை நாம் மதிக்கின்றோம். விட்டுப் போன பலருக்கு நாம் மதிப்பு அளித்து அவர்களுக்குச் சலுகைகள் வழங்குகிறோம். முன்பிருந்த அரசு சுதந்திரப் போராட்ட வீரர்களை மதிக்கவில்லை என்று கூறுவது சரியல்ல.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு நமது மாநில அரசு 50 ரூபாய் மாதம் ஒன்றுக்குத் தருகிறார்கள். மத்திய அரசு 200 ரூபாய் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். மத்திய அரசு கொடுக்கின்ற ரூபாயும், மாநில சர்க்கார் கொடுக்கக்கூடிய ரூபாயும் சேர்த்து கொடுக்கப்படுகிறதா? அப்படி இல்லாவிட்டால், அவர்களுக்கு எவ்வாறு வழங்கப் படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மத்திய அரசின் சார்பில் பல அறிவிப்புகள் வந்திருக்கின்றன. எப்படிச் செயல்படுத்தப்போகிறார்கள் என்பது தெரியவில்லை. ஆறு மாத காலம் சிறையில் இருந்தவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் உதவித் தொகை அளிக்கப்படும்போது, மாநில அரசையும் கலந்து கொண்டால் இருவரும் இணைந்து செயல்படுவதற்கு வசதியாக இருக்கும்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களுக்குக் கொடுத்த நிலங்களைச் சிலர் விற்று விட்டார்களே, அப்படி நிலத்தை விற்பதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்கவேண்டும். மூலக்கேள்வி தியாகிகளின் மானியத்தைப் பற்றியதாகும். தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் தரப்படும்.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, போராட்ட வீரர்களுக்கு மானியம் கொடுப்பதைப்போல், அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்விச் சலுகையும், அதேபோல போரிலே இறந்த வீரர்களின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகையும், உத்தியோகச் சலுகையும் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இன்றுள்ள நிலைமையில் தியாகிகளுக்கு மானியம் அளிப்பதைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோம். மற்றச் சலுகைகளைப்பற்றி இப்போது எதுவும் சொல்வதற்கில்லை.

Income through toddy and arrack.

*865. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state the amount collected from the leasing out of toddy and arrack shops and the income derived as licence fee from the wine shops during 1971–72 ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1971–72-ல்

(1) கள்ளுக்கடைகள் ஏலத்தில் விட்டது ரூ. 8,99,82,759.

(2) சாராயக் கடைகள் ஏலத்தில் விட்டது ரூ. 6,57,86,648.

(3) மதுக்கடைகளுக்கு உரிமம் வழங்கியது ரூ. 42,85,000.

(4) மாநில ஆயத்தீர்வை காலனேஜ் கட்டணம் மூலம் எதிர் பார்த்தது சுமார் ரூ. 6,00,00,000.

மொத்தம் ரூ. 22,00,54,623.

இதில் 31–1–1972 முடிய அரசுக்கு செலுத்தப்பட்ட தொகை மொத்தம் ரூ. 13.77 கோடி.

திரு. என். கே. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, அதிகப் படியான வருமானம் எந்த மாவட்டத்திலிருந்து கிடைக்கிறது ?